# வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

## மூன்றாம் தவணைப்பரீட்சை - 2023 (2024)

**தரம் - 06** **தமிழ்மொழியும் இலக்கியமும்** **நேரம் : 2.00 மணி**

## பகுதி - I

01) மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. மிருகங்கள் பெரும்பாலும் காட்டிலே வாழும். இங்கு காடு என்ற சொல்லின் ஒத்தபதம்.
   (1) நாடு (2) தனம் (3) வனம் (4) வானம்

2. "வெய்யிற்கொடுமையம்மா மேனி வியர்க்குதம்மா" இவ் வாக்கியத்திலுள்ள **மேனி** என்ற சொல்லின் பொருள்.
   (1) வியர்வை (2) துன்பம் (3) உடல் (4) வெய்யில்

3. அதிகமான ஆசை ஆபத்தில் முடியும். **ஆசை** என்பதன் எதிர்ச்சொல்.
   (1) பேராசை (2) விருப்பம் (3) நிராசை (4) அவா

4. புலி வேகமாகப் பாய்ந்தது என்பது
   (1) கலப்பு வாக்கியம் (2) தனி வாக்கியம்
   (3) கதம்ப வாக்கியம் (4) கூட்டு வாக்கியம்

5. புலவர்கள் என்பது
   (1) உயர்திணை ஒருமை (2) உயர்திணை பன்மை
   (2) அஃறிணை ஒருமை (4) அஃறிணை பன்மை

6. பறவைகள் பலவிதம் என்ற கட்டுரையிலே முதன் முதலில் பார்க்கும் ஒத்திகை எவ்வாறு சுட்டப்படுகிறது
   (1) வெள்ளுடுப்பு (2) அரங்கேற்றம்
   (3) அம்பலம் (4) வெள்ளோட்டம்

7. ஒருவர் கூறிய சொற்களை அல்லது கூற்றுக்களை அவர் கூறியவாறே எடுத்தாளும் போது இடப்படும் குறியீடு.
   (1) முற்றுப்புள்ளி (2) வினாக்குறி
   (3) மேற்கோட்குறி (4) அடைப்புக்குறி

8. உலகத்தில் முதன்முதலாகச் செய்தித்தாள் தோன்றிய நாடு
   (1) அமெரிக்கா (2) இத்தாலி
   (3) பிரான்ஸ் (4) லண்டன்

9. உயிர் எழுத்துக்களில் நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை
   (1) 05 (2) 12 (3) 18 (4) 07

10. "ஏமலி போல் வாழேல்" என்றார் பாரதியார் இதில் **ஏமலி** என்பது.
    (1) குதிரை (2) நாய் (3) மான் (4) யானை



kalvi.lk

11. ‘ஈசலும் புற்றும்’ என்னும் கதையின் ஆசிரியர்.
(1) எஸ். ஆர். கோவிந்தராசன் (2) திமிலைத்துமிலன்
(3) கோகிலா மகேந்திரன் (4) செ.கணேசலிங்கன்

12. “ உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? இங்கு **உயர உயர** என்பது.
(1) இணைமொழி (2) அடுக்குத்தொடர்
(3) இரட்டைக்கிழவி (4) அடுக்கிடுக்கு மொழி

13. **நற்றுணை** என்பதைப் பிரித்து எழுதினால்
(1) நல்ல+ துணை (2) நல் + துணை
(3) நல்லி + துணை (4) நல்ல + துணை

14. **பூ** என்பது எவ்வகைத் தொடர்
(1) வினைமுற்றுத் தொடர் (2) பெயர்த்தொடர்
(3) வினைத் தொடர் (4) எழுவாய்த்தொடர்

15. அந்தாட்டிக்காவில் நீர் வாழ்வுக்குச் சிறத்தலடைந்த **பறவை**
(1) கசோவரி (2) பென்குயின் (3) கிவி (4) எமு

16. (Key board ) என்பதன் தமிழ் வடிவம்
(1) தட்டச்சு (2) விசைப்பலகை
(3) திறப்புப்பலகை (4) மின்னஞ்சல்

17. பின்வருவனவற்றில் கடிதத்தின் உறுப்பாக அமையாதது
(1) விளிப்பு (2) முகவரி
(3) உடல் (4) தொடருரை

18. மந்தி என்பது
(1) மரம் (2) ஆண்குரங்கு (3) பெண்குரங்கு (4) மான்

19. நான் பாடசாலைக்குச் ........................................ .
(1) சென்றோம் (2) சென்றார்கள் (3) சென்றீர் (4) சென்றேன்

20. “ஒற்றுமையே பலம்” என்ற கருத்தைத் தரும் பழமொழி
(1) உப்பிட்டவரை உள்ளளவும் நினை
(2) ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்
(3) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
(4) அறம் செயவிரும்பு

**(20 x 2 = 40 புள்ளிகள்)**



kalvi.lk

# பகுதி - II

01) பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தலைப்பினைத் தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை எழுதுக.

1. சூழலைப் பாதுகாப்போம்
2. நான் விரும்பும் பெரியார்
3. ஒழுக்கம் உயர்வு தரும்
4. முறிந்த குடையின் சுயசரிதை

(20 புள்ளிகள்)

02) உமது பாடசாலையில் நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிக்கு வருமாறு வெளியூரில் உள்ள நண்பனுக்கு 50 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

03) பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்கத்தக்க வகையில் வாக்கியம் எழுதுக.

1. அலை
2. சரிவிகிதஉணவு
3. உளவு
4. தேர்வு

(10 புள்ளிகள்)

04) பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.

1. சேர்.ஐசாக் நியூற்றன் விஞ்ஞான வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைகள் 2 தருக.
2. மழவராயனின் ஊர் எது?
3. மனிதனுக்கு மேன்மை தருவது எது?
4. பாரதியாரால் "தம்பி" என அழைக்கப்பெற்றவர் யார்?
5. 'ஈசலும் புற்றும்' என்ற அலகில் "நீங்களும் நாங்களும் ஒரே இனம், சிறகு முளைத்துவிட்டால் நீங்கள் பெரியவர்களா?" இவ்வினா யாரால் யாரைப் பார்த்து கேட்கப்பட்டது?
6. இராமனுடைய சகோதரர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
7. செய்ந்நன்றி அறிதல் என்றால் என்ன?
8. 'கண்ணகி வழக்குரைத்தல்' என்ற பாடத்தில் வரும் கதாபாத்திரங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
9. கொட்டாங்கச்சி என்றால் என்ன?
10. மோவாஸ் பறவையின் முட்டை ஓடு எதற்குப் பயன்படுகின்றது?

**(10 x 2 = 20 புள்ளிகள்)**



kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL AND ENGLISH MEDIUMS

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

**GRADE 6**

திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.

FREE **ADMISSION**

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- **Spoken English Classes.**
- **Sinhala Reading and Writing Classes.**
- **Map Marking Classes**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page